# விடுமுறைக்கால பயிற்சி
# கிறீஸ்தவம் (NRC)
# தரம் : 06

## அலகு 01 : இறைவனின் அழகிய படைப்பு

1. உலக படைப்பு குறித்த செய்திகள் உள்ளடங்கும் விவிலிய நூல் எது?
   தொடக்கநூல்
2. படைப்பின் சிகரம் யார்?
   மனிதன்
3. கடவுள் உலகைப்படைக்கும் போது மண்ணுலகு எவ்வாறு இருந்தது?
   உருவமற்று வெறுமையாக இருந்தது
4. கடவுளது 6 நாள் படைப்பினையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடுக?
   1. இரவு, பகல்
   2. விண்ணுலகம், மண்ணுலகம்
   3. புல், பூண்டு, செடி, மரம்
   4. சூரியன், சந்திரன், விண்மீன்
   5. புறவைகள், கடல்வாழ் உயிரினங்கள், கால்நடைகள்
   6. மனிதன்
5. மனிதன் யாருடைய சாயலில் படைக்கப்பட்டான்?
   கடவுளின் சாயலில்
6. கடவுள் எத்தனையாம் நாளை ஆசீர்வதித்து புனிதப்படுத்தினார்?
   7 ஆம் நாள்
7. படைப்பின் உரிமையாளர், பொறுப்பாளர் யார்?
   கடவுள், மனிதன்
8. இறைவன் எமக்களித்த படைப்புக்களை நாம் எவ்வாறு பராமரிக்க வேண்டும்?
   பொறுப்புடன் பராமரிக்க வேண்டும்.
9. தொடக்கநூல் 1:1-2 பகுதியை விவிலியத்தைப் பார்த்து எழுதி மனனம் செய்க

10. இறைவனுக்கு நன்றி கூறி சிறு செபம் எழுதுக?

## அலகு 02 : இறை படைப்பின் மகிமை

1. பின்வரும் இறை கொடைகளின் வழியாக நாம் பெறும் பயன்கள் எவை?
    1. சூரியன்
    2. சந்திரன்
    3. தாவரங்கள்
    4. சமுத்திரங்கள்
2. கீழ்வரும் விலங்குகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பண்புகள் எவை?
    1. நாய் - நன்றி உணர்வு
    2. காகம் - ஒற்றுமை
    3. தேனீ – உழைப்பு
    4. எறும்பு – சுறுசுறுப்பு

3. தி:பா - 100 : 5 பகுதியை விவிலியத்தைப் பார்த்து எழுதி மனனம் செய்க.

## அலகு 03 : இறை படைப்பின் சிகரம் : மனிதன்

1. பின்வரும் இறைவார்தை பகுதியை விவிலியத்தைப் பார்த்து பூர்த்தி செய்க.
   " கடவுள் …………………….. மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே ……………………. படைத்தார். ………………………………. படைத்தர்.

   தொ : நூல் - 1 : 27 – 28

2. கிறிஸ்தவ மாணவனாகிய உம்மிடம் காணப்பட வேண்டிய பண்புகளைக் குறிப்பிடுக.?
   இரக்கம், பொறுமை, மன்னிப்பு, அன்பு, பகிர்வு, ஒற்றுமை

3. மனிதன் வாழ்வதற்காக கடவுள் அவனுக்கு அளித்த பரிசு யாது?
   ஏதேன் தோட்டம்

4. கடவுள் மனிதனிடம் ஒப்படைத்த பொறுப்பு யாது?
   படைப்புக்களைப் பண்படுத்தி, பாதுகாத்து பராமரித்தல்.

5. சூழல் மனிதனால் அழிவிற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 5ஐ குறிப்பிட்டு அவற்றை தடுக்கக்கூடிய முறைகளைத் தருக?

## அலகு 04 : கிறிஸ்துவின் அதிசயப் பிறப்பு

1. கடவுளின் நற்செய்தியை அறிவிக்கும் தூதன் யார்?
   கபிரியேல்

2. மரியாளிடம் இயேசுவின் பிறப்பைக் குறித்த செய்தியை அறிவித்தவர் யார்?
   கபிரியேல்

3. இறை செய்தியைக் கேட்ட மரியாவிடம் காணப்பட்ட பண்பு யாது?
   தாழ்மை, கீழ்ப்படிவு

4. இயேசுவின் பிறப்பு முதன் முதலாக யாருக்கு அறிவிக்கப்பட்டது?
   இடையர்களுக்கு

5. ஞானிகளுக்கு இயேசுவைச் சென்று வணங்க வழிகாட்டியது எது?
   விண்மீன்

6. குழந்தை இயேசுவுக்கு ஞானிகள் வழங்கிய பரிசுப் பொருட்கள் எவை?
   பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம்

7. இயேசு ஏழையாகப் பிறந்தார் என்பதற்கான சான்றுகள் 2 தருக?
   மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்
   ஏழை இடையருக்கு பிறப்பு செய்தி அறிவிக்கப்பட்டது

8. தாவீதின் ஊர் எனப்பட்டது எது?
   பெத்தலகேம்

9. இடையர்களுக்கு குழந்தை இயேசுவைக்குறித்து கூறப்பட்ட அடையாளம் யாது?
   குழந்தையை துணிகளால் சுற்றி முன்னணையில் கிடத்தியிருப்பர்.

10. இயேசுவின் பிறப்பு அதிசயமானது என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக?
    பாடநூல் பக் 19,20

## அலகு 05 : இயேசுவின் இளமைப் பருவம்

1. யூத சட்டப்படி எத்தனை வயதை அடைந்த ஆண் பிள்ளைகள் வளர்ந்தோராகக் கருதப்பட்டனர்?
   12 வயது

2. இயேசு பன்னிரண்டு வயதில் பெற்றோருடன் எங்கு சென்றார்?
   எருசலேம் ஆலயம் பாஸ்கா விழாவிற்காக

3. பன்னிரண்டு வயதை அடைந்த ஆண் பிள்ளைகள் பெற்றுக் கொண்ட உரிமைகள் எவை?
   1. திருக்கோவிலில் வழிபாட்டில் பங்கு பெறல்
   2. சமயக் கல்வியைப் பெற்றுக் கொள்ளல்
   3. திருக்கோவிலில் நடைபெறும் விழாக்களில் பங்கு கொள்ளல்

4. யூதர்கள் பாஸ்கா விழாவைக் கொண்டாடியதற்கான காரணம் யாது?
   இஸ்ரவேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று கானான் தேசத்திற்கு சென்றதை நினைவுகூர்ந்து கொண்டாடினர்

5. ஆலயத்தில் தரித்திருந்த சிறுவன் இயேசு யாது செய்தார்?
   போதகர்கள் நடுவில் இருந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார்.

6. ''மகனே ஏன் இப்படிச் செய்தாய்'' எனும் தாய் மரியாவின் வினாவிற்கு இயேசு அளித்த பதில் யாது?
   நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் எனது தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

7. இயேசு அளித்த பதிலிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன?
   1. நாம் எப்போதும் கடவுளுடன் தொடர்பு கொண்டு வாழ வேண்டும்
   2. இயேசு பெற்றோருக்கு பணிந்திருந்தது போன்று சிறுவர்களாகிய நாமும் பெற்றோர், பெரியோருக்குப் பணிந்திருத்தல் வேண்டும்.
   3. இயேசு கடவுளாலும் மனிதனாலும் போற்றப் பட்டது போன்று நாமும் நல்ல பிள்ளைகளாக நடந்து பிறர் போற்ற வாழ வேண்டும்.

8. இடைவெளி நிரப்புக.

   '' இயேசு…………………….…………… ………………………………………….. மிகுந்து ……………………….…… ……….…………………… உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

   லூக்கா 2 : 51 – 52

## அலகு 06 : நமக்காக மரித்த இயேசு

1. பாவத்திற்கு விமோசனம் பெறுதல் தொடர்பாக யூத மதத்தில் காணப்பட்ட நம்பிக்கை யாது?
   பாஸ்கா தினத்தன்று ஆட்டுக்குட்டியை பலியிடுவதன் மூலம் பாவ விமோசனம் கிடைக்கும் என்பதாகும்.

2. இயேசுவின் பாடுகள் மரணத்தை எத்தினத்தில் நினைவு கூறுகின்றோம்?
   பெரிய வெள்ளி

3. எபிரேய மொழியில் கொல்கொதா என்பதன் பொருள் யாது?
   மண்டையோட்டு இடம்

4. இயேசு சிலுவை சுமக்க உதவியவர் யார்?
   சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன்

5. இயேசு அனுபவித்த பாடுகளை மத்தேயு நற்செய்தியின் பின்னணியில் தருக?
   1. சிலுவை சுமத்தி கபாலஸ்தலத்திற்கு அழைத்துச் சென்றனர்
   2. கசப்பு கலந்த திராட்சை இரசத்தை குடிக்க கொடுத்தனர்
   3. சாட்டையால் அடித்து தலைக்கு முள்முடி சூட்டினர்
   4. ஆடைகளை குலுக்கல் முறையில் பங்கிட்டனர்

6. இயேசுவின் சிலுவையில் தொங்கவிடப்பட்டிருந்த வசனம் யாது?
   இவர் யூதரின் அரசனாகிய இயேசு

7. "ஏலி ஏலி லாமா சபத்தானி" என்பதன் பொருள் யாது?
   ஏன் இறவைா என் இறவைா ஏன் என்னைக் கைவிட்டீர்

8. இயேசுவை நோக்கி சிலுவையடியில் நின்றோர் கூறிய வார்த்தைகள் எவை?
   1. ஆலயத்தை இடித்து மூன்று நாட்களுக்குள் கட்டுகிறவனே உன்னை நீயே காப்பாற்று
   2. பிறரை மீட்டான் ஆனால் தன்னை மீட்க முடியவில்லை
   3. நீ இஸ்ராயேலரின் அரசனா? சிலுவையிலிருந்து இறங்கி வா அப்பொழுது நாங்கள் உம்மை நம்புவோம்

## அலகு 07 : உயிர்ப்பின் நற்செய்தி

1. இயேசு இறந்து எத்தனையாம் நாள் உயிர்தெழுந்தார் ?
   3ம் நாள்

2. இயேசுவின் கல்லறையைப் பார்க்கச் சென்றோர் யார்?
   பெண்கள்

3. பெண்கள் எத்தினத்தில் சென்றார்கள்?
   ஓய்வு நாளுக்குப் பின் வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில்

4. இயேசுவின் கல்லறையில் பெண்கள் கண்ட காட்சி யாது?
   கல்லறையை மூடியிருந்த கல் புரட்டப்பட்டு ஆண்டவரின் தூதர் உட்கார்ந்திருந்தார்

5. இயேசு உயிர்த்த பின் காட்சி கொடுத்த பெண்மணி யார்?
   மகதலா மரியா

6. இயேசுவின் உயிர்ப்பால் நாம் பெற்றுக் கொண்ட நன்மைகள் எவை?
   1. வாழ்வில் புத்தொளி
   2. பாவங்களுக்கு மன்னிப்பு
   3. நிலைவாழ்விற்கான உரிமை

## அலகு 08 : உயிர்ப்புக்கு சான்று பகர்தல்

1. இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள் யார்?
   1. மகதலா மரியா
   2. யோவன்னா
   3. யாக்கோபின் தாய் மரியா
2. இயேசு உயிர்த்தார் என்பதற்கான சான்றுகள் எவை?
   1. வெறுமையான கல்லறை
   2. இயேசுவின் உடலைச் சுற்றியிருந்த துணி
   3. பெண்கள்
   4. வானதூதர்
3. இயேசு எம்மாவூரில் யாருக்கு காட்சியளித்தார்?
   கிலெயோப்பாவிற்கும் அவனோடு சென்ற மற்ற சீடனுக்கும்
4. எம்மாவூர் சீடர் இயேசுவை எப்போது அடையாளம் கண்டனர்?
   பந்தியமர்ந்து அப்பத்தை எடுத்து பிட்டுக் கொடுத்த போது
5. ‘‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’’ யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   இயேசுவால் சீடருக்கு
6. இயேசுவின் விலாவில் தனது கையை விட்டு இயேசுவை கண்டு கொண்டவர் யார்?
   தோமா
7. இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர எம்மில் வளர்க்க வேண்டிய பண்பு யாது?
   இறைவிசுவாசம்

## அலகு 09 : நிலைவாழ்வு

1. பாவம் என்றால் என்ன? அதனால் ஏற்படுவது யாது?
   இறைவிருப்பத்தை மீறிச் செயற்படுதல் பாவமாகும்.
   எமக்கும் இறைவனுக்கும் இடையிலான தூரம் அதிகரிக்கும்

2. இயேசு மரணத்தில் இருந்து உயிர்ப்பு அடைந்த நாள் எவ்வாறு கிறீஸ்தவர்களால் அழைக்கப்படுகிறது?
   ஈஸ்டர் அல்லது பாஸ்கா

3. நிலை வாழ்வை குறித்து இயேசு கூறியது யாது?
   நாம் எமது தவறுகளை திருத்தி பாவத்திலிருந்து விடுபட்டு புது வாழ்வு வாழும் பொழுதே நிலைவாழ்வை நாம் உரிமையாக்க முடியும்

4. நிலைவாழ்வை நாம் உரிமையாக்க என்ன செய்ய வேண்டும்?
   1. வளங்களைப் பகிர்ந்தளித்தல்
   2. பிறருக்கு உதவி செய்தல்
   3. அன்பு, ஏற்றுக் கொள்ளல், இனிய சொற்களைப் பேசுதல்
   4. நோயாளர், விதவைகள், பாவிகள் மீது கருணை காட்டல்

## அலகு 10 : இயேசுவின் திருமுழுக்கு

1. இயேசு வளர்ந்த ஊர் எது?
   நாசரேத்து

2. இயேசு பகிரங்கப் பணியை எத்தனை வயதில் ஆரம்பித்தார்?
   30 வயதில்

3. திருமுழுக்கு யோவான் எங்கு தனது பணியை ஆற்றினரா்? இவருடைய பெற்றோர் யாவர்?
   யோர்தான் நதிக்கரையில்
   செக்கரியா எலிசபேத்

4. திருமுழுக்கு யோவான் மக்களுக்கு விடுத்த அழைப்பு யாது?
   மனம் மிரும்பி புது வாழ்வு வாழ அழைத்தார்

5. இயேசுவிற்கு திருமுழுக்கு அளித்தவர் யார்?
   திருமுழுக்கு யோவான்

6. இயேசு திருமுழுக்கு பெறும் போது இடம் பெற்ற சம்பவங்கள் எவை?
   வானம் திறந்து தூய ஆவி புறாவைப் போல் இயேசு மீது வந்திறங்கினார்

7. அங்கு கேட்ட குரல் ஒலி யாது?
   "என் அன்பார்ந்த மகன் நீயே உன் பெருட்டு நான் பூரிப்படைகிறேன்"

8. இயேசுவின் தீருமுழுக்கு நிகழ்விலிருந்து வெளிப்படுவன எவை?
   1. இயேசு இறைவனின் அன்பான மகன்
   2. தந்தையாகிய கடவுள் பூரிப்படைந்தார்
   3. தூய ஆவி புறா வடிவில் வந்திறங்கியது

## அலகு 11 : இறைவார்த்தை தரும் வெற்றி

1. இயேசு திருமுழுக்கு பெற்ற பின் எங்கு சென்றார்?
   தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

2. இயேசு எத்தனை நாள் அலகையால் சோதிக்கப்பட்டார்?
   40 நாள்

3. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள் எத்தனை?
   3

4. சோதனைகளை இயேசு எதன் மூலம் வெற்றி கண்டார்?
   இறைவார்த்தை மூலம்

5. இயேசுவிற்கு ஏற்பட்ட சோதனைகள் எவை?
   1. நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும் படி கட்டளையிடும்
   2. உலக அரசுகளைக் காட்டி “ நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்”
   3. நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் உம்மைப் பாதுகாக்கும் படி கடவுள் தூதருக்கு கட்டளை இடுவார்

6. இயேசு கற்றுக் கொடுத்த வேண்டுதல் யாது?
   விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே.......................................

## அலகு 12 : கிறிஸ்தவ மறை பரவுதல்

1. இயேசு எப்போது விண்ணேற்றமடைந்தார்? எங்கு?
   உயிர்த்தெழுந்து 40 நாட்களுக்குப் பின்
   பெத்தானியாவில் உள்ள ஓர் மலையில்

2. சீடர்கள் மீது தூய ஆவி எத்தினத்தில் பொழியப்பட்டது?
   பெந்தக்கோஸ்து

3. சமாரியாவில் நற்செய்தியை அறிவித்த சீடன் யார்?
   பிலிப்பு

4. திருச்சபையின் தலைவராக இருந்தவர் யார்?
   சீமோன் பேதுரு

5. திருத்தொண்டர்கள் எத்தனை பேர்? அவர்கள் எதற்காக தெரிவு செய்யப்பட்டார்கள்?
   7 பேர்
   கிரேக்க மொழி பேசும் யூதர்களின் கைம்பெண்களுக்கு அன்றாட பந்தி பகிர்ந்தளிப்பதற்காக

6. கல்லெறிந்து கொலை செய்யப்பட்ட திருத்தொண்டர் யார்?
   ஸ்தேவான்

7. பிலிப்பு எங்கு செல்லும் பாதையில் அமைச்சரை சந்தித்தார்?
   காசா செல்லும் பாதையில்

8. எத்தியோப்பிய அமைச்சர் வாசித்த பகுதி யாது? ‘
எசாயா 53 : 7 – 8 துன்புறும் ஊழியன்

9. பிலிப்பினால் திருமுழுக்கு பெற்றுக் கொண்டவர் யார்?
எத்தியோப்பிய நாட்டின் அரசசியான கந்தகியின் நிதி அமைச்சர்

## அலகு 13 : அன்பின் சிறப்பு

1. நல்லதோர் கிறிஸ்தவனாவதற்கு நம்மிடம் இருக்க வேண்டிய இணைடு குணாதிசயங்கள் எவை?
இறைவனில் அன்பு
அயலானில் அன்பு

2. “போதகரே நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?” யாரால் யாருக்கு கூறப்பட்டது?
திருச்சட்ட அறிஞரால் இயேசுவுக்கு

3. திருச்சட்ட அறிஞரின் வினாவுக்கு இயேசு அளித்த பதில் யாது?
“ உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக உன் மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக”

4. யார் என் அயலான்? எனும் அறிஞரின் வினாவுக்கு விளக்கமாக கூறிய உவமை யாது?
நல்ல சமாரியன் உவமை

5. யூதன் எங்கிருந்து எங்கு செல்லும் போது கள்வன் கையில் அகப்பட்டான்?
எருசலேமிலிருந்து எரிக்கோவிற்கு

6. யூதனுக்கு உதவி செய்யாது சென்றோர் யாவர்?
யூத குரு
லேவியர்

7. திருக்கோவிலில் வழிபாட்டுப் பணி செய்பவர் யார்?
லேவியர்

8. யூதர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட பிரிவினர் யார்?
சமாரியர்

9. அடிபட்ட யூதனுக்கு உதவி செய்தவர் யார்?
சமாரியர்

10. சமாரியன் யூதனுக்கு எவ்வகையில் உதவி செய்தார்?
காயங்களிற்கு திராட்சை இரசமும் எண்ணெயும் வார்த்து சாவடிக்கு அழைத்துச் சென்று பராமரித்தார்

## அலகு 14 : நம்பிக்கையில் உறுதி

1. இயேசுவால் பார்வை பெற்ற குருடன் யார்?
   பர்த்திமேயு
   திமேயு என்பவரின் மகன்

2. பர்த்திமேயு இயேசுவை நோக்கி எவ்வாறு கூக்குரலிட்டான்?
   "தாவீதின் மகனே எனக்கிரங்கும்"

3. ஆண்டவரே நான் பார்வை பெற வேண்டும் என் வேண்டியவர்க்கு இயேசு அளித்த பதில் யாது?
   "உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று"

4. பர்த்திமேயுவின் வாழ்வில் இருந்து நாம் கற்றுக் கொள்வது யாது?
   நாம் இறைவனில் நம்பிக்கையாய் இருந்து அவரை அணுகிச் செல்லும் பொழுது வாழ்வில் வெற்றி பெற முடியும்

5. நம்பிக்கை என்பது யாது?
   நாம் எதிர் நோக்கியிருப்பவை கிடைக்கும் எனும் உறுதி

## அலகு 15 : எல்லையற்ற மன்னிப்பு

1. இறைதந்தையின் எல்லையற்ற மன்னிப்பை உணர்ந்த இயேசு கூறிய உவமை யாது?
   ஊதாரி மைந்தன் உவமை

2. தந்தையிடமிருந்து தனது பங்கை பிரித்துத் தரும்படி கேட்டவர் யார்?
   இளையமகன்

3. பணத்தை பெற்றக் கொண்ட இளைய மகன் யாது செய்தான்?
   நண்பர்களுடன் சேர்ந்து ஊதாரித்தனமாய் பணத்தை செலவழித்தான்

4. தன் தவறை உணர்ந்த இளையமகன் என்ன செய்தான்?
   தந்தையிடம் திரும்பி வந்து உங்களுக்கும் இறைவனுக்கும் எதிராகப் பாவம் செய்தேன் மகன் என்று கூற தகுதியற்றவன் ஆனேன் என்னை ஓர் வேலைக்காரனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என வேண்டினான்

5. மகன் மீண்டும் வருவதைக் கண்ட தந்தை என்ன செய்தார்?
   ஆரத்தழுவி முத்தமிட்டு விருந்து படைத்து கொண்டாடி, மகன் மரித்து, உயிர்த்து வந்துள்ளான் எனக்கூறி மகிழ்ந்தார்